JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

(**A**1-**Muhammad Taj Maideen**, **S/o**.**Saiyadu Sarbudeen is absent**, **For A**1, **petition U/s**.317 **Cr**.**P**.**C**. **filed and allowed**. **A**2-**Abdul Bashith**, **S/o**.**Kaja Maitheen split up from this case**. **A**3-**Alavudeen Basha**, **S/o**.**Saiyadu Sarbudeen is present**)

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 19.04.2023

**CC.No.12/2014** **Name**:**Karthikeyan S/o**.**Ganesan PW**1

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா.1 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1)எனக்கு தகவல் தெரிந்தபோது நான் எங்கிருந்தேன் என்றால் என்னுடைய மாமியார் ஊரான சிவகிரியில் இருந்தேன். சிந்து என்பவர் போன் பண்ணி சொல்லும்போது அப்போதுதான் பூட்டு உடைக்கப்பட்டதாக என்னிடம் தகவல் சொன்னார் என்றால் சரிதான். நான் சிவகிரியில் இருந்து சம்பவ இடத்திற்கு நான் போகும்போதே சிந்து போலீசுக்கு தகவல் சொன்னதன்பேரில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்த பின்னிட்டுதான் போலிசார் வந்தார்கள்.

2)நான் சம்பவ இடத்திற்கு போனவுடன் வீட்டை திறந்து உள்ளே சென்று காணாமல் போன பொருட்களை பற்றி வீட்டிற்குள் தேடி பார்த்தேன் என்றால் சரிதான். எனது வீட்டில் சிசிடிவி கேமரா இல்லை என்றால் சரிதான். பக்கத்து வீட்டில் சிசிடிவி கேமரா உள்ளதா என்றால் இல்லை. சம்பவம் நடந்தது குறித்து உடனடியாக காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் புகார் கொடுக்க போகும்போது என்னுடன் சாட்சிகள் அருண்குமார், பிரபாகரன், மகேஸ், தங்கராஜ் ஆகியோர்கள் வந்தார்கள் என்றால் சரிதான்.

3)அவ்வாறு நாங்கள் போகும்போது எங்களது வீட்டில் திருடி சென்ற நபர்களை பிடித்து விட்டதாக போலிசார் எங்களிடம் கூறினார்கள் என்றால் சரிதான். அப்போதே போலிசார் எங்களிடம் இரண்டு ஐந்நூறு ரூபாய் நோட்டுக்களை

காண்பித்து இது தான் என்னுடைய வீட்டில் இருந்து களவு போனது என்று கூறினார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னுடைய வீட்டில் களவு போன பொருட்கள் கண்டுபிடித்தது விபரம் பற்றியும், யார் அதை களவாடினார்கள் என்பது பற்றியும் எழுதி என்னிடமும், சாட்சிகள் பிரபாகரன், மகேஸ், தங்கராஜ், கௌதமி, சிந்து ஆகியோர்களிடமும் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அவ்வாறு செய்த கையொப்பம் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகார் ஆகும்.

4)மற்ற பேப்பர்களில் மேற்சொன்ன சாட்சிகளிடம் போலிசார் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். புகார் கொடுக்க நான் காவல் நிலையம் சென்றபோது என்னுடைய வீட்டில் திருடி சென்ற நபர்களை பிடித்து வைத்திருப்பதாக தகவல் சொன்னார்கள். ஆனால் அவர்களை நான் பார்க்கவில்லை. சென்னிமலை ரோட்டில் பேக்கரி வைத்துள்ள லோகநாதன் என்பவரை எனக்கு யார் என்று தெரியாது.

5)புகார் கொடுக்கும்போது காணாமல் போன பணத்தின் டினாமினேசன் விபரம் பற்றி சொல்லிதான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அதில் நுறு, ஐந்நூறு ரூபாய் நோட்டுக்களின் விபரத்தை சொல்லியிருந்தேன் என்றால் சரிதான். என்னுடைய உடைக்கப்பட்ட இரண்டு பூட்டுக்களை போலிசார் கைப்பறினார்கள். என்னுடைய வீட்டில் பூட்டு உடைக்கப்பட்டதாக சொல்வது தவறு என்றும், என்னுடைய வீட்டில் பொருட்கள் களவு போனதாக சொல்வது தவறு என்றும், பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**(A1-Muhammad Taj Maideen, S/o.Saiyadu Sarbudeen is absent, For A1, petition U/s.317 Cr.P.C. filed and allowed. A2-Abdul Bashith, S/o.Kaja Maitheen split up from this case. A3-Alavudeen Basha, S/o.Saiyadu Sarbudeen is present)**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 19.04.2023

**CC.No.12/2014 Name:Thangaraj S/o.Subramaniayam PW2**

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா.2 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1)அ.சா.1 கார்த்திகேயன் எனது நண்பர் ஆவார். அவரை சிறு வயதிலிருந்தே எனக்கு தெரியும். சம்பவத்திற்கு அடுத்த நாள் தான் எனக்கு சம்பவம் பற்றி தகவல் தெரியும். தகவல் அறிந்து நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. எங்கு சென்றேன் என்றால் என்னுடைய வேலைக்கு சென்றிருந்தேன். எங்கு வேலைக்கு போனேன் என்றால் ஈரோட்டில் வேலைக்கு போனேன். எனக்கு வேலை நேரம் என்னவென்றால் 12 மணி நேரம் ஆகும்.

2)சம்பவம் குறித்து எனது நண்பர் என்னிடம் தகவல் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் சொல்லிதான் எனக்கு சம்பவம் விபரம் தெரியும் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு போகும்வரை என்னுடைய நண்பரின் வீட்டில்தான் சம்பவம் நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் போகும்போதே காவல் துறையினர் அங்கிருந்தார்கள் என்றும், நான் அங்கு செல்வதற்கு முன்பாகவே போலிசார் அனைத்து பணிகளையும் முடித்து இருந்தார்கள் என்றும், நான் அங்கு சென்றவுடன் சாட்சி கையொப்பம் மட்டும் போடச்சொன்னார்கள் என்றும் அதன்படி நான் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான்.

3)சம்பவ இடத்தில் இருந்து பூட்டுக்களையும், அங்கு பதிவாகியிருந்த கைரேகையையும் போலிசார் எடுத்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த பேப்பரில் போலிசார் என்ன எழுதியிருந்தார்கள் என்று நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் என்ன எழுதியிருந்தார்கள் என்றால் லொக்கேஷன் பற்றி எழுதியிருந்தார்கள். அதில் யாருடைய வீட்டில் இருந்து என்ன என்ன பொருட்கள் காணாமல் போனது என்று எழுதியிருந்தார்கள் என்றால் சரிதான். அதில் பணம் எவ்வளவு ரூபாய் காணாமல் போனது என்ற விபரம் அதில் எழுதியிருந்தது என்றால் சரிதான். அ.சா.1 எனது நண்பர் என்பதால் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.